Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 78

சனிக்கிழமை
12 பெப்ரவரி 2022

தை 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**

| | |
|---|---|
| நேற்று | 1,259 |
| மொத்தம் | 6,25,804 |

**உயிரிழப்பு**

| | |
|---|---|
| நேற்று | 31 |
| மொத்தம் | 15.754 |

# கொலைக்குற்றவாளியே நம் நாட்டின் ஜனாதிபதி!

## கோத்தாவின் வருகைக்கு எதிராக நேற்று முழக்கம்



**வவுனியா, பெப்ரவரி 12**
**ஜனாதிபதியின் வவுனியா பல்கலைக்கழகத்துக்கான பயணத்தை எதிர்த்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தடுத்தமையால் அவர்களுக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.**

15

## காதலுக்கு ஒரு செடி!

கொழும்பு, பெப். 12
காதலர் தினமான பெப்ரவரி 14ஆம் திகதியன்று, 'காதலுக்காக ஒரு செடி' என்ற கருப்பொருளில் மரம் நடும் திட்டத்தை

15

## பூசாரியை நிர்வாணமாக்கி காசு பறித்தவர் நேற்றுக் கைது!

கிளிநொச்சி, பெப். 12
பூசாரியொருவரை நிர்வாணமாக்கி கப்பமாகப் பெருந்தொகைப் பணத்தை

15

## சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 12
தனங்களப்பு பகுதியில் உள்ள காற்றாலை ஒன்றின் கோபுரப் படியில் தூக்கிட்ட நிலையில் இளைஞனின் சடலமொன்று நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி

15

## இராவணனை ஆராயுங்கள்!

### பத்திரண எம்.பி. கோரிக்கை

கொழும்பு, பெப். 12
இலங்கை மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாததால், முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண கோரிக்கை விடுத்தார்.

15

## வவு. பல்கலைக்கழகம் ஜனாதிபதியால் திறப்பு

வவுனியா, பெப். 12
வவுனியா பல்கலைக் கழகம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம்

15



*முச்சந்தி முரளி*



"உவைக்கு உது சின்னத் தட்டுப்பாடு மாதிரித்தான் தெரியும். எங்களுக்கெல்லோ அது பெரும் கஷ்டம். உதைத்தான் சொல்லுறது பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்கு சீவன் போகுதெண்டு!"

## 4 பொருள்களுக்கே சிறு தட்டுப்பாடாம்!

### பஸில் கண்டுபிடிப்பு



கொழும்பு, பெப். 12
நாட்டில், நான்கு பொருள்களுக்கே சிறிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏனைய சகல அத்தியாவசியப் பொருள்களும் தேவையானளவுக்கு கையிருப்பில் உள்ளன என்று தெரிவித்தார் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச.

15

## பறிபோன ஆசனம் மீண்டும் யாழுக்கு!

யாழ்ப்பாணம், பெப். 12
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கை மீண்டும் 7ஆக அதிகரித்துள்ளது. 2021ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரகாரம் கம்பஹா மாவட்டத்துக்கு ஓர் ஆசனம் குறைந்துள்ள

15

## இலங்கை அணிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

### சிட்னியில் முன்னெடுப்பு

சிட்னி, பெப். 12
இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு எதிராக புலம்பெயர் தமிழர்களால் அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.
இலங்கை கிரிக்கெட் அணிக்கும் அவுஸ்ரேலிய அணிக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்று நண்பகல் 1.30 மணியளவில் ஆரம்பித்

15

## கூட்டு வன்புணர்வு வழக்கு பிரதான சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், பெப். 12
நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற கூட்டு வன்புணர்வு தொடர்பில் பிரதான சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
அலைபேசியில் வந்த தவறான அழைப்பையடுத்து.

15

## கார் - பஸ் விபத்து ஐவர் காயம்

### கனகராயன்குளத்தில் சம்பவம்

வவுனியா, பெப். 12
வவுனியா கனகராயன்குளம் பகுதியில் நேற்று கார் - பஸ் மோதுண்டு விபத்துக்கு உள்ளானதில், ஐந்து பேர்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்த வவுனியா வளாகம், 'வவுனியா பல்கலைக்கழகம்' என்ற பெயரில் தேசிய பல்கலைக்கழகமாக ஆரம்பிக்கும் நிகழ்வு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று இடம்பெற்றது. நாட்டின் 17ஆவது அரச பல்கலைக்கழகமாக 'வவுனியா பல்கலைக்கழகம்' வரலாற்றில் இடம்பிடித்திருக்கிறது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான தினேஸ் குணவர்தன, டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், குலசிங்கம் திலீபன், புத்தசாசன அமைச்சின் செயலர் பேராசிரியர் கபில குணவர்தன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் மூத்த பேராசிரியருமான சம்பத் அமரதுங்க ஆகியோரும், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (ஒ)














## காலநிலையால் கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

ஈழத்தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலைவரங்களும் எனும் தொனிப்பொருளில் தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நடத்த தீர்மானித்திருந்த கருத்தரங்கம் மழை காரணமாக எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (ஒ-5)

# தமிழ்மொழியைப் புறக்கணித்ததால் நிகழ்வை நாம் பகிஷ்கரித்தோம்!!!

வவுனியா, பெப். 12

வவுனியா பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்காது சிங்களமொழி பொறிக்கப்பட்ட கல்வெட்டை முன்னுரிமைப்படுத்தியமையை கண்டிப்பதாகவும் இவ்வாறு தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதால் அந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்றும் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வவுனியா பல்கலைக்கழகத்தில் மூன்று மொழியிலிலும் அமைக்கப்பட்ட கல்வெட்டு ஜனாதிபதி கோத்தாபயவுக்காக மாற்றப்பட்டுள்ளது. சிங்கள மொழியிலான கல்வெட்டு முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மொழி பின்தள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய சிங்கள மொழிக்கும் பௌத்தத்துக்கும் முன்னுரிமை என்று தேர்தலில் வெற்றி பெற்ற காலத்தில் இருந்தே கூறி வரும் நிலையில் அதன் ஒரு வடிவமாகவே இந்த செயற்பாட்டையும் நோக்கவேண்டியுள்ளது.

வடக்கு கிழக்கில் தமிழ் மொழி முன்னுரிமை என அரசமைப்பு ரீதியாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அண்மையில் வடக்குக்கு வந்த நீதி அமைச்சரும் தமிழ் மொழிக்கு முன்னுரிமை என்று தெரிவித்திருந்த நிலையிலும் இவ்வாறான ஒரு சம்பவம் பல்கலைக்கழக வளாகத்தில் அரங்கேறியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றேன், என்றார். (ஒ-110)

# ஜனாதிபதி வருகையால் மறைந்தன வீதிக்குழிகள்

வவுனியா, பெப்.12

ஜனாதிபதியின் வருகையை அடுத்து, மன்னார் வீதியின் பல பகுதிகளிலும் காணப்பட்ட குழிகள், மழைக்கு மத்தியிலும் சீர்செய்யப்பட்டுள்ளன.

வவுனியா-மன்னார் வீதியில் உள்ள வவுனியா பல்கலைக்கழகத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று வருகை தந்தார். வவுனியாவில் இருந்து மன்னார் வீதி ஊடாக பல்கலைக்கழகம் செல்லும் வரை உள்ள பகுதியில் வீதிப் புனரமைப்பு, நீண்ட நாள்களாக கைவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மழைக்கு மத்தியிலும் அவசர அவசரமாக நேற்று முன்தினம் வீதிகள் குழிகளின்றி மட்டப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் வருகையால், வீதிக்கு விடிவு கிட்டியுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நிதி கோரவில்லை


## நாணய நிதியம் அறிவிப்பு

கொழும்பு,பெப்.12
இலங்கை இதுவரை நிதியுதவி கோரவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவுப் பணிப்பாளர் கெரி ரைஸ் தெரிவிக்கையில்,
எமது பிரதிநிதிகள் அண்மையில் கொழும்புக்குப் பயணித்தனர். இது தொடர்பில் நிறைவேற்று சபை கலந்துரையாடும். இலங்கை அரசு இதுவரையில் அதிகாரபூர்வமாக நிதி உதவிகள் எதனையும் கோர வில்லை. ஆயினும், கோரிக்கை விடுக்கப் பட்டால் பேச்சு நடத்தத் தயார். அத்துடன் இலங்கை யின் பொருளாதார நிலைமைகளை உன்னிப்பாக அவ தானித்து வருகின்றோம் - என்றார்.
அதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது. (ஒ-4,இ)

# பெப்ரவரி 14 வரை மின்வெட்டில்லை

**கொழும்பு,பெப்.12**
**நாட்டின் எந்தவொரு பகுதியிலும் நாளை மறுதினம் வரை மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டாது என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் போதுமான மின்சார உற்பத்தி உறுதி செய்யப்பட்டுள் ளது. அதனால் மின்சார விநியோ கம் தடைப்படாது. ஆயினும் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மின்சாரத்தைச் சிக்க னமாகப் பயன்படுத்துமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நா யக்க மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-4,இ)



## சுகாதார ஊழியர்கள் பகிஷ்கரிப்பு தடுப்பூசிபெறவந்தோர் ஏமாற்றம்

சாவகச்சேரி, பெப். 12
சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடு பட்டுள்ளதால் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு கொரோ னாத் தடுப்பூசி பெறவந்த வர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணி யகத்தில் பிரதி வெள்ளிக் கிழமைகளில் கொரோ னாத் தடுப்பூசி ஏற்றப்ப டும்.
இதனால் நேற்று தடுப்பூசி ஏற்றுவதற்கு வந்திருந்த முதியவர்கள் வெளிநாடு களுக்கு செல்வோர் உட்ப ட்ப பலர் சுகாதார அலுவ லர்களின் பணிப்புறக்க ணிப்பால் ஏமாற்றத்துடன் திரும்பினர்.
முச்சக்கரவண்டிகளில் தடுப்பூசி ஏற்ற அழைத்து வரப்பட்ட முதியவர்களும் தடுப்பூசி ஏற்ற முடியாமல் திரும்பியதைக் காண முடிந்தது. (வ-9)

## ஒசுசலவில் இலவசமாக மருந்துகள் விநியோகம்

கொழும்பு,பெப்.12
சுகாதாரப் பணியாளர்கள் மேற்கொண்டு வரும் பணிப்புறக்கணிப்புக் காரணமாக, அரச மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருந் துத் துண்டுகளுக்கான மருந்துகளை, அரச ஒசுசலவில் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகா தாரப் பணியாளர்கள் நாடு முழுவதும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதால் மருத்துவம னைகளில் 18 தொழிற்சங்கங்களின் சேவை கள் முடங்கியுள்ளன.
இந்த நிலையில் நோயாளிகளுக்கான மருந் துகள் விநியோகத்தைச் சீர்ப்படுத்தும் நோக்கு டன், இலவச வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெய சுமன தெரிவித்துள்ளார். (ஒ-4இ)

# நீதிமன்ற உத்தரவுக்கமைய போராட்டம் நிறுத்தப்படும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.12
நீதிமன்றின் உத்தரவுக்கு மதிப்ப ளித்து, அரச தாதியர் உத்தியோ கத்தர்கள் சங்கம் போராட்டத்தை இடைநிறுத்தும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.
பல சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த காலவரையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட் டத்தை இடைநிறுத்துமாறு, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இரண்டு தடை உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. நீதிமன்ற உத் தரவுக்கு அமைவாக அரச மருத் துவமனைகளுக்குச் செல்லும் நோயாளர்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் முடிவுக்கு வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை எந்தத் தடை உத் தரவும் கிடைக்கவில்லை என்று துணை மருத்துவத் தொழில்க ளுக்கான கூட்டு கவுன்சிலின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித் துள்ளார்.
உத்தரவு தெரியப்படுத்தப்பட்டால், தேவையான சட்ட ஆலோசனை களைப் பின்பற்றி பதிலளிப்பர். அவர்களின் கோரிக்கைகள் நியா யமானவை. வேலைநிறுத்தப் போராட்டம் அமைதியான முறை யில் நடைபெற்று வருகின்றது. அவர்களின் குறைகளை ஒடுக்கு வதற்கு நடவடிக்கை எடுக்காமல், அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். அரசு ஜனநா யக கட்டமைப்புக்குள் செயற்பட வேண்டும்.
அவர்களின் பிரச்சினைகளுக்கு ஒரிரு நாள்களில் தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித் துள்ளார். (ஒ-4,இ)




குளிக்கப் போய் சேறுபூசுறது ஆருக்கும் பிடிக்குமோ? இல்லைத்தானே. ஆனால் அப்பிடித்தான் கன இடங்களில நடக்குது.
அச்சுவேலியில சித்த வைத்தியக் குளிசையள் செய்யிற இடம் ஒண்டு இருக்கெல்லோ. இஞ்சதான் வடமாகாணத்தில இருக்கிற எல்லாச் சித்த வைத்தியசாலையளுக்கும் குளிசையள், மருந்துகள் செய்து அனுப்பிறவை. கொரோனாவுக்கு பிறகு சனத்துக்கு சித்த வைத்தியத்தில கூட ஈடுபாடு வந்து. கனபேர் உந்தக் குளிசையளை வாங்கி போடுகினம். ஆனால் அப்பிடி போடுற குளிசையைச் செய்யிற ஆக்கள் சுத்தமா, நோய் நொடி இல்லாதவையா எல்லோ இருக்கோணும். அதுதானே நடைமுறை. ஒரு சாப்பாட்டுக் கடையில கூட, இருமலோட ஒராள் வேலை செய்தா உடன பி.எச்.ஐ மார் ஆளைக் கலைச்சு, கடைக்கும் சீல் வைச்சிடுவினம். அப்பிடி நிலைமையிருக்க, எல்லாரும் வருத்தம் மாறவேணும் எண்டு போடுற குளிசையளைச் செய்யிறவர் 'மாத்த முடியாத தோல் வருத்தக்காரர்' எண்டால் எப்பிடி இருக்கும். ஆனால் அச்சுவேலியில சித்த மருந்துகள் செய்யிற இடத்தில அதுதான் நடக்குது.

'சொரியாஸிஸ்' எண்ட தோல் வருத்தத்தைக் கேள்விப்பட்டிருப்பியள் தானே. கால் கையில வெள்ளைப்பூச்சு மாதிரி படை படையா வந்து, பிறகு தோல் சின்னச் சின்னதாக கொட்டுண்ட படி இருக்கும். இதை இல்லாமல் செய்ய இப்போதைக்கு மருந்து இல்லை. அப்பிடி ஒரு சொரியாஸிஸ் வருத்தக்காரர் தான் அச்சுவேலியில நிண்டு, மருந்துகளைச் செய்யிற இடத்தில மேற்பார்வை செய்யிறார். எப்பிடியிருக்கு கூத்து?

பச்சி அந்த வருத்தக்காரரை குறை சொல்லேலை. வருத்தம் வந்தால் அவர் என்ன செய்யமுடியும்? ஆனால் அவருக்கு பொருத்த மான வேற இடங்கள் இருக்க, மருந்து செய்யிற இடத்திலதான் வேலை குடுக்கவேணுமோ? பட்சி இதைப்பற்றி விசாரிச்சதில அவர் ஒரு சாதாரண பணியாளராத்தான் எடுபட்டிருக்கிறார். ஆனால் ஆளுக்கு மருந்து செய்யிற மிசினை இயக்கிற வேலை குடுத்திருக்கினம். எல்லா இடமும் பாய்ஞ்சு போய் சுகாதாரச் சீர்கேடு எண்டு குற்றம் காணுற சுகாதாரத் திணைக்களக்காரர் இதுகளை எப்பிடி விடுகினம்? அவ்வளவு ஏன், அந்த மருந்து செய்யிற இடத்தில இருக்கிற சித்தவைத்தியம் படிச்ச டாக்குத்தர்மார்கூட இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கினமே. இப்பிடி ஒரு வருத்தக்காரரை வைச்சு செய்யிற மருந்தால, அதே வருத்தம் ஆருக்கும் வந்தா உவையள் பதில் சொல்லுவினமோ? இந்தப் பகுதிக்கு பொறுப்பான சுகாதார மருத்துவ அதிகாரி, பி.எச்.ஐ மார் இதை இனியாவது கவனிப்பி னமோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சன் விடுவிக்கப்பட்டால் பலருக்குச் சட்டச் சிக்கல்

## பெரமுன எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.12

முன்னாள் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டால், பலர் சட்டச் சிக்கலை எதிர்கொள்ள நேரிடும் என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஞ்சனை விடுவித்தால், அவரது தொலைபேசியில் உள்ள அனைத்து ஒலிப்பதிவுகளையும் பகிரங்கப்படுத்த வேண்டும். தற்போது அவரை விடுதலை செய்யக்கோரும் நபர்கள், தவறு செய்து சிறையில் அடைக்கப்படுவதை விரும்பாதவர்களே. அதனாலேயே ரஞ்சனை விடுதலை செய்ய வேண்டும் என்கின்றனர். ரஞ்சன் ராமநாயக்க நீதித்துறைக்கு எதிராக வெளியிட்ட கருத்துக்களின் பாரதூரத்தை நாட்டு மக்கள் அறிய வேண்டும்.



எனவே, ரஞ்சன் ராமநாயக்க பொலிஸ் மற்றும் நீதித்துறை மீது பிரயோகிக்கப்பட்டுள்ள அழுத்தங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அவரது அனைத்து குரல் பதிவுகளையும் சமூக மயப்படுத்துவதன் ஊடாக அதனை அறிந்து கொள்ள முடியும் - என்றார்.

(ஒ-4-இ)



# தடுப்பூசி ஏற்றும் பணி மன்னாரில் முன்னெடுப்பு

மன்னார், பெப்.12

மன்னார் மாவட்டத்தில், இரண்டு தடுப்பூசிகளைப் பெற்று மூன்று மாதம் நிறைவடைந்த 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி .வினோதன் தலைமையில் இராணுவத்தினரின் நெறிப்படுத்தலில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்றது. இதன்படி, மன்னார் பேருந்து நிலையத்திலும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இராணுவத்தினர் மற்றும் சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்புடன் அதிகளவானவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டனர். (வ-56)

# முன்னாள் சட்டமா அதிபரை நீதிமன்றில் நிறுத்த முயற்சி!

கொழும்பு,பெப்.12



**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் சதி உள்ளது என்று கருத்து வெளியிட்ட முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை, நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று இலங்கை கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் ஈடுபட்டவர்களுடன் தொடர்புடைய சதிக்காரர்கள் கைது செய்யப்படாமை, இலங்கையின் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலான விடயம்.

2019 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் வெற்றியின் ஒரு கட்டமாக, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இருந்திருக்குமானால், தேர்தல் ஒன்று உயிர்ப் பலி கொடுக்கப்பட்ட முதல் தேர்தலாக அது அமைந்திருக்கும். இந்த நிலையில் முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை, நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதன் ஊடாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சதித்திட்டத்தைப் பகிரங்கப்படுத்த முடியும் - என்றார்.

(ஒ-4-இ)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு அதிகரித்த கொடுப்பனவு

சாவகச்சேரி, பெப்.12


சமுர்த்திப் பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட உதவித் தொகை தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளன. பயனாளிகள் அந்தந்த கிராம அலுவலர் பணியகத்தில் குறித்த உதவித்தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்திப் பயனாளிகளுக்கான ஆயிரம் ரூபா அதிகரிப்பு பெப்ரவரி தொடக்கம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதிகரிக்கப்பட்ட தொகை தொடர்பில் பயனாளிகளுக்கு விழிப்புணர்வு வழங்கும் வகையில் பெப்ரவரி மாதக் கொடுப்பனவு அந்தந்தப் பிரிவில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளது. (வ-9)

# தடுப்பூசி பெறுதல் சமூகப் பொறுப்பு

## சுகாதார அமைச்சு அறிவுரை

கொழும்பு,பெப்.12



கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது அனைவரதும் சமூகப் பொறுப்பு. மாறாக போலித் தடுப்பூசி அட்டைகளைப் பயன்படுத்துவது உங்களுக்கே ஆபத்தை விளைவிக்கும் என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட அனைவரது தகவல்களும் சுகாதார அமைச்சிடம் உள்ளன. எனவே தடுப்பூசி பெற்றுக் கொள்வதைத் தவிர்ப்பது ஒரு பயனற்ற முயற்சி.

அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

(ஒ-4-இ)

# கடைக்குச் சேதம் விளைவிப்பு மூவருக்கு சீர்திருத்த கட்டளை

மன்னார்,பெப்.12

மன்னார் முருங்கனில் கடை ஒன்றைச் சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைதான மூவருக்கு, தண்டத்துடன் சமுதாய சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மன்னார் நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை முற்படுத்தப்பட்டனர்.

மூவரும் தங்கள் குற்றங்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா தண்டமும், ஒரு மாதச் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும், அவ்வாறு சிறை தண்டனை அனுபவிக்க விருப்பம் இல்லையேல், ஒவ்வொருவரும் தலா 50 மணித்தியாலங்கள் சீர்திருத்தக் கட்டளைக்கு அமைய செயற்பட வேண்டும் என்றும் நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

மூவரும் சிறைத் தண்டனையைக் கைவிட்டு, சீர்திருத்தக் கட்டளையை ஏற்றுக் கொண்டனர்.

(ஒ-4-60)



# 20 பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதி

மன்னார், பெப்.12

மன்னாரில் சமுதாய சீர்திருத்த கட்டளையாளர்களுக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு ஒரு தொகுதி உலர் உணவு பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன. மன்னார் நீதிவான் நீதிமன்றத்தின் சமுதாய சீர்திருத்த திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் இவை வழங்கப்பட்டன. (வ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விசாரா ஊழியர்கள் பல்கலையில் போராட்டம்!

**யாழ்ப்பாணம், பெப். 12**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்பாக நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



பல்கலைக்கழக விவகாரங்களில் கல்வி அமைச்சரின் மௌனம் ஏன்? அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் மீளத்திறந்து கல்வி உரிமையை உறுதிப்படுத்து! பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வை வழங்கு! பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை உடனடியாக நீக்கு! அமைச்சரவை உப குழுவின் முடிவினை சம்பள ஆணைக்குழு மற்றும் டி.எம்.எஸ். நிராகரிப்பது ஏன்? என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கல்விசாரா ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் தொடர்பில், பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்கத்தின் தலைவர் மங்கல சிவரூபன் தெரிவித்ததாவது:

தொழிற்சங்க கூட்டுக்குழுவின் கோரிக்கைக்கு அமைவாக இந்த ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

2016ஆம் ஆண்டிலிருந்து நாம் எமக்கு ஏற்பட்ட ஊதிய இழப்பை சரிசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம். 2019ஆம் ஆண்டு 47 நாள்கள் தொடர்ச்சியாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டோம். அப்போதைய அரசாங்கம் எங்களுடைய போராட்டத்தின் நியாயத்தை விளங்கி உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தது. இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தது.

2019ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமானது அந்த உடன்படிக்கையை இல்லாமற் செய்துவிட்டது. புதிதாக வந்த அரசாங்கமும் இது தொடர்பில் பரிசீலிக்க அமைச்சரவை இரண்டு உப குழுக்களை நியமித்தது. அந்த அமைச்சரவை உப குழுக்களும் சம்பள அதிகரிப்பு மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதனை நியாயப்படுத்தின. ஆனால், அரசின் சம்பள ஆணைக்குழுவும் முகாமைத்துவ சேவை ஆணைக்குழுவும் சம்பளத்தை வழங்காமல் இழுத்தடிப்பு செய்து வருகின்றன. இனியும் எமது போராட்டம் செவிசாய்க்கப்படாமல் எமது கோரிக்கை நிறைவேற்றப் படாதபட்சத்தில் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்போம் - என்றார். (ம-125,23)



# முன்பள்ளி ஆசிரியர்களின் கோரிக்கை நியாயமானது

*செல்வம் எம்.பி. எடுத்துரைப்பு*

மன்னார்,பெப்.12
சிறந்ததொரு கல்விச் சமுதாயத்தை உருவாக்குவதற்காகப் பாடுபடும் முன்பள்ளி ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்றவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று முன்பள்ளி ஆசிரியர்கள் தொடக்கம் அனைத்து ஆசிரியர்களும் தங்களுக்கு நீதி வேண்டி வீதியில் இறங்கிப் போராடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஏணியாக இருந்து ஒவ்வொரு நபர்களையும் உருவாக்கிய ஆசிரியர்கள் வீதியில் நிற்கின்றனர். அவர்களின் கோரிக்கைக்கு இன்றுவரை ஒரு நீதியான பதிலும் வழங்கப்படவில்லை. இன்றைய பொருளாதாரச்சுமை என்னவென்று உயர் அரச அதிகாரிகளுக்கும் அடிமட்ட ஏழை மக்களுக்கும் தெரியும்.

வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் இந்த நேரத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் 6 ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவால் என்ன செய்யமுடியும். போரால் பாதிப்படைந்த முன்பள்ளி ஆசிரியர்களின் நிலைமை மிகவும் கவலைக்குரியது- என்றுள்ளது. (ஒ-4,213)

# உதய வாசலில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 12
உதயவாசலின் 5ஆவது நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

வேலணையூர் ரஜிந்தன் எழுதிய 'பேரன்பின் படிமங்கள்' கவிதை நூல் இன்று பி.ப. 3 மணிக்கு உதயன் பத்திரிகை வளாகத்தில் உதயவாசலில் இடம்பெறும்.


கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய பிரதி அதிபர் ப.கமல்தாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், எச்.என்.பி. அசூரன்ஸின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் கோ.பிரதீபன் பிரதம அதிதியாகவும், தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு.றஜீபன் சிறப்பு அதிதியாகவும், கிருபா லேணர்ஸ் இயக்குநர் அ.கிருபாகரன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-5)

# பரீட்சைக் கடமைகளில் இனரீதியான பாகுபாடு

*இம்ரான் எம்.பி. முறைப்பாடு*

திருகோணமலை மாவட்டத்தில் இந்த வருடம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக் கடமைகளின் போது, இனரீதியான பாகுபாடு காட்டப்பட்டுள்ளது என்று, நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் முறைப்பாடு அளித்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முஸ்லிம் அதிபர், ஆசிரியர்கள் இம்முறை பரீட்சைக் கடமைகளில் சிரேஷ்டத்துவம் கவனத்தில் கொள்ளப்படாமல், முதலாந்தர அதிபர், ஆசிரியர்கள் உதவி மேற்பார்வையாளர்களாக இம்முறை நியமிக்கப்பட்டுள்ளனர். வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் கூட பெயர், தரம், பாடசாலை என்பன சரியாகக் குறிப்பிடப்படாது பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அதேவேளை திருகோணமலை சண்முகா பாடசாலை பரீட்சைக் கடமைகளில் திடீர் மாற்றம் செய்யப்பட்டு, திருகோணமலையைச் சேர்ந்தவர்களே அங்கு பரீட்சைக் கடமைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள னர். நேர்மையாக நடக்க வேண்டிய பரீட்சைக் கடமைகளில் இவ்வாறான இனரீதியான புறக்கணிப்புகளும், விருப்பு வெறுப்புகளும் இடம்பெற்றால் பரீட்சைத் திணைக் களத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிவிடும். எனவே, எதிர்காலத்தில் நடுநிலையாகச் செயற்படுவோரை, பரீட்சைபிராந்திய இணைப்பாளர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஒ-4-இ)



# இலங்கைக்கு உதவ ஜப்பான் பின்னடிப்பு

கொழும்பு,பெப்.12
இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கு, ஜப்பானிய அரசு பின்னடித்துள்ளது என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடும் போது, 2020 ஆம் ஆண்டில் இலங்கைக்கு ஜப்பான் வழங்கிய உதவிகள் 94 வீதத்தால் குறைவடைந்துள்ளன.

அதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 42.7 பில்லியன் யென் உதவி வழங்கப்பட்டது. எனினும் 2020 ஆம் ஆண்டில் அந்த உதவி 1.4 பில்லியன் யென்னாகக் குறைந்துள்ளது. ஜப்பானின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவிருந்த இலகு ரயில் திட்டத்தை, தற்போதைய அரசு ரத்துச் செய்ததை அடுத்து, உதவிகள் குறைக்கப்பட்டுள்ளன என்றும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ-4,இ)

# புதிய அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் பதவியேற்பு



வொஷிங்டன். பெப்.12
இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜூலி சுங் பிரதி இராஜாங்கச் செயலாளர் வெண்டி ஆர். ஷெர்மன் முன்னிலையில் பதவியேற்றார். ஜூலி சுங்குக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதில் பெருமையடைவதாக பிரதி இராஜாங்கச் செயலாளர் வெண்டி ஆர். ஷெர்மன் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

சியோலில் பிறந்த ஜூலி சுங் கம்போடியாவின் புனோம் பென் நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் துணைத் தூதராகவும், தாய்லாந்தின் [illegible] யுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேமலாப நிதிக்கு வரி

# வர்த்தமானியை மீளப்பெறாவிட்டால் போராட்டத்தில் குதிப்போம்

### ஹர்ஷ டி சில்வா எம்.பி. ஆவேசம்



**கொழும்பு, பெப்.12**

**ஊழியர் சேமலாப நிதியத்தில் 25 வீத வரி அறவிடும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி உடனடியாக மீளப்பெறாவிட்டால், ஐக்கிய மக்கள் சக்தி அரசியல் போராட்டத்தில் குதிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்துக்கு 100 பில்லியன் ரூபா தேவைப்படும். ஆனால் இதற்கான நிதி இல்லை, இனியும் பணம் அச்சடிக்க முடியாது. ஆகவேதான் ஊழியர் சேமலாப நிதியத்தில் அரசாங்கம் கைவைத்துள்ளது. 2019 ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் பிரகாரம் இந்த நிதியில் மூன்று ட்ரில்லியன் ரூபா உள்ளது. 2020/2021 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கையை இன்னமும் அரசாங்கம் வெளியிடவில்லை. ஆனால் ரூ. 250 பில்லியன் இந்த இரண்டு ஆண்டுகளில் இலாபமாக கிடைத்துள்ளது எனத் தெரியவந்துள்ளது. மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்க இடமளிக்க முடியாது. ஊழியர் சேமலாப நிதியத்தில் 25 வீத வரி அறவிடும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி உடனடியாக மீளப்பெறாவிட்டால், இதற்கு எதிராக சகல மக்களையும் ஏனைய கட்சிகளையும் இணைத்துக்கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி போராட்டத்தில் குதிக்கும் - என்றார். (வ-இ)

## 20 மருத்துவர்களுக்கு கொரோனாத் தொற்று

பதுளை, பெப்.12



பதுளை பொது மருத்துவமனையில் 20 மருத்துவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவசர சிகிச்சைப் பிரிவில் பயணியாற்றும் ஒன்பது மருத்துவர்களில் ஆறு பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதனால் மருத்துவமனையில் சிகிச்சை நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் பாலித ராஜபக்ச தெரிவித்துள்ளார். இதேவேளை, கொரோனா அறிகுறிகள் வெளிக்காட்டப்படாததால் வேகமாக பரவுகின்றது என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் சுட்டிக்காட்டி யுள்ளார். அதைத் தவிர்க்க சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## பொலிஸார் — பாதாளக்குழு பரஸ்பர துப்பாக்கிச் சூடு

### ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.12



மொறட்டுவ, மோதர, ஏகொட உயன பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கும் பாதாள உலகக்குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் பாதாள உலகக்குழு உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் அபா என்று அழைக்கப்படும் சமீர சம்பத் எனவும் அவர், டுபாயில் உள்ள பாணந்துற சாலிந்த என்ற நபருடன் நெருக்கமான தொடர்புகளில் இருந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ- இ)

## ஹெரோய்னுடன் கைது தண்டத்துடன், சீர்திருத்தம்

மன்னார்,பெப்.12

800 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதானவருக்கு தண்டத்துடன், சீர்திருத்தக் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது.

மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த நபர், மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை முற்படுத்தப்பட்டார்.

சந்தேக நபர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து, குற்றவாளிக்கு 9 ஆயிரம் ரூபா தண்டமும், 50 மணித்தியாலங்கள் சீர்திருத்தக் கட்டளையும் நீதிவானால் பிறப்பிக்கப்பட்டது. (ஒ-4-60)

## ஈ.பி.எவ், ஈ.ரி.எவ் வரி விதிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்






கொழும்பு, பெப்.12

ஊழியர் சேமலாப நிதியத்தின் இலாபம் மீது 25 வீத மிகைக் கட்டண வரி அறவிடும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக நாரஹேன்பிட்டியில் உள்ள தொழில் அமைச்சுக்கு முன்பாக நேற்று முன்தினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அனைத்து நிறுவன ஊழியர் சங்க உறுப்பினர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின்போது அங்கு சென்ற தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தான் தொழிலாளர்கள் பக்கம் இருப்பதாகவும், தொழிற்சங்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அமைச்சரவைக்கு எடுத்து சொல்வதாகவும் உறுதியளித்தார். (வ-இ)

## சிப்தொற புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் கோரல்

சாவகச்சேரி, பெப்.12

தென்மராட்சிப் பிரதேசத்தில் 2020 க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்று க.பொ.த.உயர்தரம் கற்கும், சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து சிப்தொற புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. விண்ணப்பப்படிவத்தை அந்தந்த சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரிடம் பெற்றுப் பூரணப்படுத்தி பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீடத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## நாடாளுமன்றில் சம்பாதித்தவருக்கு மக்கள் பற்றி பேச உரிமையில்லை

### அமைச்சர் ரோஹித சாடல்

கொழும்பு. பெப்.12



ஐந்து நாள்கள் சபையிலிருந்து 60 மில்லியன் ரூபாவுக்கு வாகன அனுமதிப்பத்திரத்தை விற்ற நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஒருவர் மக்கள் பிரச்சினை பற்றிப் பேச ஆரம்பித்துள்ளார் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன சாடியுள்ளார். குற்றவியல் நடைமுறைச் சட்டவரைவு மீதான இரண்டாம் வாசிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது.

கடந்த ஆட்சியில் ஐந்து நாள்கள் மட்டுமே சபையிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது வாகன அனுமதிப்பத்திரத்தை 60 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார். இந்த நிலையில், குறித்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தற்போது மக்கள் படும் இன்னல்கள் குறித்து பேச ஆரம்பித்துள்ளார் - என்றார். (வ-இ)

## திருக்கேதீச்சரத் திருவிழாவில் அங்காடிகளுக்குத் தடை

மன்னார்,பெப்.12

திருக்கேதீச்சர சிவராத்திரித் திருவிழாவில், அங்காடிகள் அமைப்பதற்குத் தடை விதிக்கப்பட் டுள்ளது. கொரோனாத் தொற்றுக் காரணமாக, இம்முறை சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. அதனால் இவ்விழாவில் அங்காடிகள் அமைப்பதற்கு சுகாதாரத் துறையினர் அனுமதி வழங்கவில்லை என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை பாலாவித் தீர்த்தத்தில் பக்தர்கள் நீராடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அங்கு மூன்று உணவகங்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த உணவகங்களிலும், மடாலயங்களிலும் உணவுகள் பொதி செய்யப்பட்டு மட்டுமே வழங்கப்படும். மருத்துவம், குடி தண்ணீர், மின்சாரம் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் வழமையான திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"எளிமையும் தூய்மையும் ஒருவனை உயர்ந்த மனிதனாக உயர்த்துகின்றன". - *கெம்பில்*

## போலிமுகம் புதிதல்ல!

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால், வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் துன்பங்கள் தொடர்பில், நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் கொண்டுவரப்படவிருந்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரியொருவரின் 'வாய்மூலமான' கோரிக்கையை அடுத்துக் கைவிடப்பட்டுள்ளது.


இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால், வடக்கிலும் தமிழகத்திலும் எழுந்துள்ள பதற்ற நிலையை புரிந்துகொள்ள முடிகின்றது என்றும், இந்த விடயத்தில் காத்திரமான முடிவொன்று எடுக்கப்படும் என்றும் தூதரக அதிகாரி தொலைபேசிவழியேவாய்மூலமாக தெரிவித்தமைக்கு அமைய அந்தப் பிரேரணையைச் சமர்ப்பிப்பதிலிருந்து பின்வாங்கியுள்ளது முன்னணி.

வடக்கு மீனவர்களின் விடயத்தில் முன்னணி கொண்டிருந்த கரிசனையும், மீனவர்களின் விவகாரத்துக்காக நாடாளுமன்றில் பிரேரணையைக் கொண்டுவர அந்தக் கட்சி திட்டமிட்டமையும் பாராட்டப்பட வேண்டியதுதான். அதில் இரண்டாவது கருத்துக்கு இடமேயில்லை. ஆனால், முன்னணி ஏன் பின்வாங்கியது? இந்தியத் தூதரகம் வழங்கிய வாக்குறுதி மீதான முன்னணியின் நம்பகத்தன்மையென்பது எந்தளவு தூரம் சரியானது? என்பதே இங்கு கேள்வி.

இந்திய- ஈழ மீனவர்களின் பிரச்சினையானது இன்று நேற்று இடம்பெறும் விடயமல்ல. இது தசாப்தப் பழசு. 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர், தமிழக மீனவர்களின் அளவுக்கதிகமான கடல் ஆக்கிரமிப்புக்களால் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த விடயம் நீறுபூத்த நெருப்பாகத்தான் இருக்கின்றது. அவ்வப்போது இந்த நெருப்புப் பற்றியெரியும். பின்னர் மீண்டும் பழைய நிலைக்குச் சென்றுவிடும். தற்போது கொஞ்சம் அதிகமாக எரிகின்றது. அவ்வளவே!.

இந்திய மீனவர்களின் அத்துமீறலையும் கடல் ஆக்கிரமிப்புக்களையும் தடைசெய்ய வேண்டும் என்றும், இந்தியர்களின் ட்ரோலர் மீன்பிடி முறையால் இலங்கையின் கடல்வளம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்றும் எமது மீனவ அமைப்புக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு முன்பாக, இந்தியர்களின் கடல் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக எமது மீனவர்கள் எத்தனையோ போராட்டங்களை நடத்திவிட்டார்கள். இத்தனைக்கும், 'செவிடன் காதில் ஊதிய சங்காகவே' இந்தியத் தூதரகமும் இந்தியாவும் வினையாற்றின. வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக, நாளுக்கு நாள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்துச் சென்றதே தவிர குறையவில்லை.

இப்படியிருக்கையில், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் வாக்குறுதி மீதான தமது நம்பிக்கை எந்த அடிப்படையில் சரியானது என்பதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தெளிவுபடுத்தவேண்டும். 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தி ஆறு தமிழ்க் கட்சிகள் அனுப்பிய கோரிக்கைக் கடிதம் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே இடம்பெற்றது, தம்மைத் தவிர மற்றையவர்கள் இந்திய மற்றும் ஏதோவொரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தான் செயலாற்றுகின்றனர் என்று சேறுபூசல்களை மேற்கொள்ளும் முன்னணியினர், தற்போது யாரைத் திருப்திப்படுத்துவதற்காக, எந்த நோக்கத்துக்காக, என்ன நம்பிக்கையின் அடிப்படையில், எந்த நிகழ்ச்சி நிரலின் கீழ் தமது பிரேரணையைக் கைவிட்டனர் என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மீனவர்களின் [illegible] மோதலும் புதிதல்ல! அதில் இந்தியா காட்[illegible] முகமும் புதிதல்ல! [illegible]



# அதிகாரத்தைப் பகிராமையே போர் மூலக் காரணம்

*மங்கள சமரவீரவுக்கான அனுதாப உரையில் எதிரணி தெரிவிப்பு*



**யாழ்ப்பாணம், பெப். 12**

**இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபோதே அதிகாரப்பகிர்வு இடம்பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாததால்தான் இந்நாட்டில் போர் மூண்டது என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமரர் மங்கள சமரவீரவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த சந்தர்ப்பத்திலேயே அதிகாரப்பகிர்வு இடம்பெற்றிருக்கவேண்டும். இந்தியா உட்பட இந்த வலயத்திலுள்ள நாடுகளில், சுதந்திரம் கிடைத்த சந்தர்ப்பத்திலேயே அதிகாரம் பகிரப்பட்டது.

சோல்பரி பிரபு, இலங்கை வந்தபோது 3 பிராந்தியங்களுக்கு அதிகாரத்தை பகிர முற்பட்டார். அதற்கான விருப்பத்தையும் கொண்டிருந்தார். எனினும், அப்போதிருந்த அரசியல் சக்திகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தடுத்து நிறுத்தின. அந்த தவறால்தான் எமது நாடு மூன்று தசாப்தகால போரை எதிர்கொண்டது.

ஏனைய நாடுகள் அதிகாரங்களைப் பகிர்ந்து, பிரச்சினையை தீர்த்துக்கொண்டு பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தன. மங்கள சம்ரவீரவும் அதிகாரப்பகிர்வுக்கு ஆதரவு வெளியிட்டவர். சிறுபான்மையின மக்களுக்கு நேசக்கரம் நீட்டியவர். அதனால்தான் அவர் வெளிவிவகார அமைச்சராக செயற்பட்டபோது, நாட்டுக்கு எதிராகத் தீர்மானங்கள் வரவில்லை.

1989 இல் தாய்மார் முன்னணியை மங்கள நிறுவினார். மஹிந்த ராஜபக்ச அன்று ஜெனிவா செல்லும்போது மங்கள தயாரித்த பட்டியலையே எடுத்துச்சென்றார் - என்றார். (ஒ-44)

# தேர்தலுக்கு அஞ்சுபவர் மஹிந்த ராஜபக்ச அல்ல

*அமைச்சர் நாமல் தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.12

மஹிந்த ராஜபக்ச என்பவர் தேர்தலுக்கு அஞ்சும் தலைவர் கிடையாது என அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். குருநாகலில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை. கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே நிச்சயம் தேர்தல் நடத்தப்படும். அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார். மஹிந்த ராஜபக்ச என்பவர் தேர்தலுக்கு அஞ்சும் தலைவர் கிடையாது. முன்கூட்டியே தேர்தலை நடத்தித்தான் எமக்குப் பழக்கம். எனவே, தேர்தலைப் பிற்போடும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை. தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக உரிமை. அதனை அவர்களுக்கு வழங்க வேண்டும் - என்றார். (வ-இ)

நாளை 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை மாசி 01

சுபநேரம் : 09.34 - 11.04

ராகுகாலம் : 05.04 - 06.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் -ஊர்காவற்றுறை

# பாதைச்சேவை இயங்காமையால் பொதுமக்கள் அசௌகரியம்

காரைநகர், பெப்.12

**காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையேயான பாதைச்சேவை கடந்த மூன்று தினங்களாக இடம்பெறாமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.**



குறிப்பாக, ஊர்காவற்றுறை பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை நீதிமன்றம், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை ஆகியவற்றில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களும், பொதுமக்களும் இவ்வாறு சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

பாதையின் வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளமையாலேயே பாதைச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த காலங்களில் இவ்வாறான பழுதுகள் உடனடியாக சரிசெய்யப்பட்டு பாதைச் சேவை தடையின்றி முன்னெடுக்கப்பட்ட போதும் கடந்த 3 தினங்களாக பாதையை சரிப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் தற்காலிகமாக ஒழுங்கு படுத்தப்பட்ட மோட்டார் படகில் ஆபத்துகளுக்கு மத்தியில் தினமும் பயணம் செய்கின்றனர். இதன் போது படகில் மோட்டார் சைக்கிள்களை ஏற்றி இறக்குவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ள மக்கள் சீரான சேவைக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-இ)



## கோபா குழுவின் தலைவராக மீண்டும் திஸ்ஸ விதாரண

கொழும்பு, பெப்.12

அரசாங்கக் கணக்குகள் பற்றிய கோபா குழுவின் தலைவராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கோபா குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் தொடர்பான விடயங்கள் அண்மையில் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கோபா குழுவுக்கான கூட்டத்தொடரில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரின் பெயரை இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் அஸோக அபேசிங்ஹ வழிமொழிந்தார்.

அரசாங்கச் செலவுகளை எதிர்நோக்குவதற்காகப் நாடாளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்டுகின்ற கணக்குகளையும் குழு தனக்கெனக்கருதும் நாடாளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதனை செய்வது கோபா குழுவின் கடமையாகும். (வ-இ)

## சிம் அட்டைப் பதிவுக்கு விரைவில் புதிய சட்டம்

கொழும்பு, பெப்.12

சிம் அட்டைகளைப் பதிவு செய்வது தொடர்பில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது எனப் பொதுப்பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நீதியமைச்சர் அலி சப்ரி மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நபர் ஒருவரின் பெயரின் கீழ் பல சிம் அட்டைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிலருக்கு தங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்ட சிம் அட்டைகள் இருப்பது கூடத் தெரியாது. இறந்தவர்களின் பெயரில் கூட சிம் அட்டைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றைக் கருத்திற்கொண்டு சிம் அட்டைகளை பதிவு செய்வதை ஒழுங்குபடுத்துவதற்கு புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என ஆலோசிக்கப்பட்டுள்ளது என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார். (வ-இ)

## 70 வயதுக்கு மேற்பட்ட கைதிகளுக்கு விடுதலை

*சட்டம் முன்மொழிவு*

கொழும்பு,பெப்.12

70 வயதுக்கு மேற்பட்ட கைதிகளை விடுதலை செய்வதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்த, நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார முன்மொழிந்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத் தண்டனையை பூர்த்தி செய்தல் போன்ற நிபந்தனைகளைக் கருத்திற்கொள்ள வேண்டும். கைதிகளின் நலன் மற்றும் அவர்களின் தேவைகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்-என்றார்.

இந்த விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் விஜேசேகர தெரிவிக்கையில், ஒரு கைதிக்கு உணவுக்காக அரசு நாளாந்தம் 300 ரூபாவைச் செலவிடுகின்றது. ஊனமுற்ற கைதிகள் உட்பட 80-90 வயதுக்கு இடைப்பட்ட கைதிகள் பலர் உள்ளனர். இது அரசுக்கு சுமையாக மாறியுள்ளது.

கொரோனாப் பரிசோதனைகளுக்கான ஒரு தொகை நிதி செலவிடப்படுகின்றது.

எனவே, 15 தொடக்கம் 20 வருடங்கள் சிறைத்தண்டனையைப் பூர்த்தி செய்த கைதிகளை விடுதலை செய்ய பரிசீலிக்க வேண்டும். அவர்களில் பெரும்பாலானோர் மனரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்-என்றார்.(ஒ-4,இ)

## எரிபொருள் விவகாரம் நிதியமைச்சு உதாசீனம்

கொழும்பு,பெப்.12



எரிபொருள்களின் விலையை அதிகரிக்குமாறு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விடுத்த கோரிக்கையை, நிதி அமைச்சு உதாசீனம் செய்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை உயர்வடைந்து செல்லும் நிலையில், உள்நாட்டிலும் எரிபொருள் விலையை அதிகரிக்க அனுமதி வழங்குமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது. எனினும் எமது கோரிக்கைக்கு இதுவரையில் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று எரிசக்தி அமைச்சின் செயலாளர் கே.டி. ஆர். ஒல்கா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, விலை அதிகரிக்கப்படாவிட்டால் ஒரு லீற்றர் பெற்றோலில் 48 ரூபா 30 சதமும், ஒரு லீற்றர் டீசலில் 15 ரூபா 68 சதமும் இந்த மாதம் முழுவதும் நட்டம் ஏற்படும் என்று பெற்றோலிய வளக்கூட்டுத்தாபன தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (ஒ-4,இ)

## 847 சுகாதார உதவியாளர்களுக்கு சேவைக்கான தகுதிகள் இல்லை


கொழும்பு,பெப்.12

டெங்கு ஒழிப்பு தொடர்பான 847 சுகாதார உதவியாளர்களுக்கு, சேவையில் ஈடுபடுவதற்கான அடிப்படைத் தகுதிகள் இல்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை இலக்காகக் கொண்டு 2017ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில், ஆயிரத்து 500 பேர்பணிக் கமர்த்தப்பட்டனர்.

ஆள்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆயிரத்து 169 பேர் தொடர் சேவைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 847 பேர் சுகாதாரப் பணியாளருக்குத் தேவையான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை.

கடந்த வருடம் 322 தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களின் ஒப்பந்த காலம் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டது. தகுதியற்ற 847 பேர் பல்நோக்கு அபிவிருத்தி செயலணித்திணைக் களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-4,இ)



மறவன்புலோ, சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 83 மாணவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கடந்த 6ஆம் திகதி வழங்கப்பட்டன. கனடா மண்வாசனை அமைப்பினூடாக அமரர்களான பத்மநாதன் கணபதிப்பிள்ளை மற்றும் பத்மநாதன் பரமேஸ்வரி ஆகியோரின் 13 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இவை வழங்கப்பட்டன. (ச-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஹிஜாப் விவகாரம்:

# மத அடையாளங்களுடன் மாணவர்கள் வரக்கூடாது

## கர்நாடக உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு

கர்நாடகா, பெப்.12

ஹிஜாப் சர்ச்சை தொடர்பான வழக்கை விசாரித்து வரும் கர்நாடக உயர்நீதிமன்றம் பள்ளி, கல்லூரிகளுக்கு மத அடையாளங்களுடன் மாணவர்கள் வரக்கூடாது என்று இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. கர்நாடகாவில் பர்தா அணிய விதிக்கப்பட்ட தடையைநீக்கக்கோரிய வழக்கில் 3 நீதிபதிகள் அடங்கிய கர்நாடக உயர் நீதிமன்ற அமர்வு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் மனுதாரர்கள் தரப்பில் மூத்த வழக்குரைஞர்கள் தேவ தத் காமத், சஞ்சய் ஹெக்டே ஆகியோர் வாதிட்டனர். ஹிஜாப் அணிந்துகொண்டு கல்லூரிகளுக்கு வருகை தர மாணவிகளுக்கு அனுமதி அளிக்குமாறு அவர்கள் கோரினர். "ஹிஜாப் அணிவது மத நம்பிக்கையின் ஒரு பகுதி என்பதால், அரசமைப்புச் சட்டப் பிரிவு 19(1)(ஏ)இன்படி ஹிஜாப் அணிவது தனிப்பட்ட உரிமை. எனவே, ஹிஜாப் அணிவதற்குச் சீருடை சட்டம் தடையாக இருக்கமுடியாது" என்று அவர்கள் வாதிட்டனர். எதிர்த்தரப்பு வழக்குரைஞர் வாதிடுகையில்,

"ஹிஜாப் அணிவதற்கு ஆதரவாகவும் எதிராகவும் சலசலப்பு ஏற்பட்டுள்ளதால், பள்ளிகள், கல்லூரிகளுக்கு 3 நாள்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சீருடை தொடர்பாக அரசு புதிய ஆணை எதையும் பிறப்பிக்கவில்லை. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்" என்றார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கில் தீர்ப்பு வெளியாகும் வரை மத அடையாளங்களை வெளிப்படுத்தும் ஹிஜாப் அல்லது காவித் துண்டு போன்றவற்றை அணிந்து வர இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கின்றது என அறிவித்துள்ளது. அடுத்த விசாரணை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 03 . 11 . 1981



மறைவு 01 . 01 . 2022

கடந்த 01.01.2022 அன்று சிவபதமடைந்த

எமது அன்புத் தெய்வம்

## அமரர் சுந்தரமூர்த்தி பிரசன்னா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.02.2022) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும், வருகைதந்து இவ் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.14, அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 801 2521

(cs 42876) (2.6)

# டெஸ்லா நிறுவனத்தில் இனப்பாகுபாடு!

## நீதிமன்றத்தில் வழக்கு

பிரபலமான கார் உற்பத்தி நிறுவனமான டெஸ்லா நிறுவனத்தில் தொழிலாளர்கள் இனப் பாகுபாட்டுடன் நடத்தப்படுகின்றனர் என நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு டெஸ்லா கார் நிறுவனத்தில் ஊழியர்கள் இனப்பாகுபாட்டோடு நடத்தப்படுகின்றனர் எனக் கூறப்பட்டது. அதன்படி தற்போது பணியிடத்தில் இனப்பாகுபாடு காட்டப்படுவதாக டெஸ்லா நிறுவனம் மீது அமெரிக்க நீதிமன்றத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தனது இணையத்தளத்தில் விளக்கம் அளித்துள்ள டெஸ்லா நிறுவனம் இது உண்மைக்கு புறம்பான, நியாயமற்ற வழக்கு என்று கூறியுள்ளது. (ச)





அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் நடைபெற்ற 4வது குவாட் கூட்டத்தில் இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று கலந்து கொண்டார். இதில் இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் பங்கேற்றனர். (ச)

# 169 ஆவது படத்தில் ரஜினிகாந்த்

சென்னை, பெப்.12

நடிகர் ரஜினிகாந்த் நடிக்கும் 169 ஆவது படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

இந்தப் படத்தை இயக்குநர் நெல்சன் இயக்கவுள்ளார். இவர் கோலமாவு கோகிலா படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானார். தற்போது விஜய்யின் 'பீஸ்ட்' படத்தை இயக்கி வருகிறார்.

இந்த நிலையில் ரஜினியின் 169 படத்தின் அறிவிப்பு தொடர்பான காணொலி ஒன்றை படக்குழு வெளியிட்டுள்ளது. அதில் ரஜினி மாஸாக அமர்ந்து கொண்டு போஸ் கொடுத்திருக்கிறார். இதனை ரஜினி ரசிகர்கள் சமூக வலைத்தளத்தில் கொண்டாடி வருகின்றனர். (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** யாரிடமும் அளவுக்கு அதிக நட்பைத் தவிர்க்க வேண்டும். நண்பர்களைத் தொடர்பு கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். நெருக்கமானவர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**இடபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கூடுதலாக உழைத்து பலன் பெறுவீர்கள். கவலை தீரும். குழந்தைகளால்சிறு பெருமிதம்ஏற்படும். நன்மை காண்பீர்கள்.

**மிதுனம்:** சக பணியாளர்களால் தற்காலிகப் பிரச்சினை ஒன்று ஏற்படும். வரவு சுமாராக இருந்தாலும் முன்பை விட நன்றாயிருக்கும். திடீர் நட்பு உருவாகலாம்.

**கடகம்:** பணத்தை கவனமாகக் கையாளுவதால் பிரச்சினை இருக்காது. நண்பர்கள் இடையே கொடுக்கல் வாங்கலைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பார்த்த வங்கிக் கடன் கிடைக்கும். பேச்சால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். மனதை அரித்துக்கொண்டிருந்த கவலை ஒன்று முடிவுக்கு வரும். வருமானம் கூடும். பழைய பிரச்சினை ஒன்று தீரும்.

**கன்னி:** குடும்பத்தில் முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்த்துவிடவும். பயணத்தை ஒத்திப்போடுவது நல்லது. மூத்தோர் உதவி செய்வர். முக்கியப் பொருள்களை கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்.

**துலாம்:** கூடுதலாக உழைத்து உயரதிகாரியின் பாராட்டை பெறுவீர்கள். தந்தைக்கு நன்மை ஏற்படும். எதிர்பாராத லாபம் உண்டு. குடும்பத்தில் சிறு சங்கடம் உண்டு. பாதிப்பு இருக்காது.

**விருச்சிகம்:** சுற்றியிருப்பவர்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். யாருடனும் வம்பு வேண்டாம். கடன் தருவதை தவிர்த்துவிடுங்கள். உங்களின் நலம் நாடும் ஒருவர் பயனுள்ள ஆலோசனை தருவார்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். மனதில் தேவையற்ற கற்பனை பயங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். நிதானமும் பொறுமையும் இருந்தால் வெல்வீர்கள்.

**மகரம்:** நல்ல செய்தி வரும். நேர்மறை சிந்தனை அதிகரிக்கும். கவலைகள் தீரும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும். குடும்பத்தில் சந்தோஷம் பெருகும். வீடு களைகட்டும்.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். பணியில் கவனம் தேவை. உங்களுக்கு நன்மைகள் கிடைப்பதை யாரும் தடுக்க முடியாது. பணியாளர்கள் இன்று சிறிதளவு கவலைப்பட நேரிடலாம்.

**மீனம்:** உடல்நிலை பாதிப்புகள் வராமல் காத்துக்கொள்ளுங்கள். ஆரோக்கியமான உணவுகளை எடுத்துக் கொள்வது நல்லது. நண்பர் ஒருவரால் நலம் அளிக்கும் விஷயம் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மருத்துவமனையில் பி.சி.ஆர். சோதனை ஆரம்பம்

வவுனியா,பெப்.12

**வவுனியா பொது மருத்துவமனையில் நேற்று வெள்ளிக்கிழமை முதல் பி.சி.ஆர் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**



இதுவரை காலமும் வவுனியா மாவட்டத்தின் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டே, அதற்குரிய முடிவுகள் பெறப்பட்டன.

இந்த நிலையில் வவுனியா மருத்துவமனைக்கு பி.சி.ஆர் ஆய்வுகூடத் தொகுதி வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மருத்துவமனை நிர்வாகத்தால், அதற்குத் தேவையான உபகரணங்கள் ஒவ்வொன்றாகத் தருவிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

"கடந்த காலங்களில் உயிரிழந்தவர்கள் மீதான பி.சி. ஆர் பரிசோதனை மற்றும் ஏனைய சோதனைகள் யாழ். போதனா மருத்துவமனை அல்லது அநுராதபுரம் மருத்துவமனைகள் ஊடாகப் பெறப்பட்டன. இதனால் மருத்துவக் குழாம், நோயாளர்கள் மற்றும் உறவினர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இதனைக் கருத்திற்கொண்டு வவுனியா பொது மருத்துவமனையிலேயே பி.சி.ஆர் ஆய்வுகூடமூடாக, முதற்கட்டமாக உயிரிழந்தவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். தீவிர நோயாளிகளுக்கான பி.சி.ஆர் சோதனையும் முன்னெடுக்கப்படும்" என்று வவுனியா பொது மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி க.ராகுலன் தெரிவித்துள்ளார். (ஒ-4- 110)

## 1,408 ரூபா திருட்டு: கான்ஸ்டபிள் கைது

கொழும்பு,பெப்.12



ஆயிரத்து 408 ரூபாவைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மொறட்டுவ, ராவத்தவத்தைப் பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடியில், நோய்வாய்ப்பட்ட வயோதிபர்களுக்கு நிதி சேகரிக்க வைக்கப்பட்டிருந்த நன்கொடைப் பெட்டியில் பணம் திருடப்பட்டுள்ளது.

பணத்தைத் திருடுவதற்காக நன்கொடைப் பெட்டியை உடைத்த நபரை, பல்பொருள் அங்காடி ஊழியர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், பொலிஸ் கான்ஸ்டபிளான சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். (ஒ-4-இ)



நாவற்குழி 300 வீட்டுத்திட்டப் பகுதியில் இயங்கும் அரும்புகள் முன்பள்ளியில் கல்விகற்கும் 35 சிறுவர்களுக்கு பாதணிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையம் மற்றும் அறம்பழகு அறக்கட்டளையின் ஊடாக இவை வழங்கிவைக்கப்பட்டன. (ச-159)

## இராணுவத்தினரால் இலவச கண்பரிசோதனை

கிளிநொச்சி, பெப்.12

கிளிநொச்சி 57ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் தருமபுரம் அ.த.க. பாடசாலையில் இன்று 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இலவச கண்பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது. (ச-113)

## யானையை துன்புறுத்தி ருவிற்றரில் காணொலி

### சாரதி கைது

திருமலை,பெப்.12

காட்டு யானையைத் துன்புறுத்தும் வகையில் காணொலி எடுத்தார் என்ற குற்றச்சாட்டில், ஜீப் சாரதி ஒருவர் வனஜீவராசி அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, 2 லட்சம் தண்டத்துடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


திருகோணமலை ஹபரணையில் காட்டுயானையைத் தொல்லை செய்யும் காணொலி, சில வாரங்களுக்கு முன்னர் சமூக ஊடகங்களில் மட்டுமன்றி, சர்வதேச ஊடகங்களிலும் பரவியது.

அந்தக் காணொலியில் குறித்த நபர் யானையை மிரட்டி, பயமுறுத்தும் வகையில், வாகனத்தை யானைக்கு அருகில் ஓட்டிச் செல்கின்றார். அதன் மீது பிரகாசமான ஹெட்லைட்களை ஒளிரவிட்டார்.

இந்தக் காட்சி ருவிற்றரில் வெளியாகி கடுமையான எதிர்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

அதனையடுத்து கெக்கிராவப் பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபரை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினர் கைது செய்தனர்.

சந்தேக நபர் கெக்கிராவ நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவருக்குத் தண்டம் விதித்து நீதிமன்று பிணையில் விடுவித்தது. (ஒ-4-இ)



## படையினரால் பூஸ்டர் டோஸ்

யாழ்ப்பாணம், பெப்.12

521ஆவது படையணியின் ஏற்பாட்டில் அச்சுவேலி பேருந்து நிலையத்தில் மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதாரத் திணைக்களத் துணை மருத்துவ உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதனால் படையினர் நடமாடும் சேவை மூலம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ச-23)

## கோப் குழுவின் தலைவராக மீண்டும் சரித ஹேரத் தெரிவு

கொழும்பு, பெப்.12

அரசாங்கத்தின் பொறுப்பு மற்றும் முயற்சிகள் பற்றிய கோப் குழுவின் தலைவராக பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கோப் குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்கள் தொடர்பான விடயங்கள் அண்மையில் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கோப் குழுக் கூட்டத்தொடரில் பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் கோப் குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



அவரின் பெயரை அமைச்சர் சரத் வீரசேகர முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த வழிமொழிந்தார். கடந்த கூட்டத்தொடரில் கோப் குழுவின் உறுப்பினராக இருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலுக்குப் பதிலாக நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் இம்முறை நியமிக்கப்பட்டுள்ளார். அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்தின் கீழியங்கும் பிற நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான அதிகாரம் கோப் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-44)

## கருத்தமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.12

வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யாவர்க்கும் நலம் எனும் நிகழ்ச்சித் தொடர் வாராந்தம் பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெற்று வருகின்றது.

அதற்கமைவாக இன்று சனிக்கிழமை "சருமம் மற்றும் கேசப் பராமரிப்பு" எனும் தலைப்பில் நிகழ்வு இடம்பெறும். இதில் கேசப்பராமரிப்பு, சுய சருமப்பராமரிப்பும் பொலிவுபடுத்தலும் மற்றும் அழகியற்கலை கற்கைநெறிகள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படும்.

899 8528 2023 என்ற சூம் இலக்கத்தில் 354485 என்ற கடவுச்சொல்லைப் பயன்படுத்தி, கருத்தமர்வில் இணைந்து கொள்ள முடியும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத தடைச் சட்டத்திருத்தம்

# சர்வதேசத்தின் தாளத்துக்கு ஆடுவதற்கு நாம் தயாரில்லை

### நீதி அமைச்சர் பதில்



கொழும்பு, பெப். 12

சர்வதேச தரப்பை திருப்திப்படுத்த பயங்கரவாத திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை செய்யவில்லை. எமது இறையாண்மையை கேள்விக்கு உட்படுத்தும் விதமாக சர்வதேச தரப்பு கூறும் விதத்துக்கு இலங்கையின் நீதிக் கட்டமைப்பை இயக்க நாம் தயாராகவும் இல்லை என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் பதில் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்கட்சியினர் நீதிமன்ற சுயாதீனம் குறித்து கேள்வி எழுப்பிக்கொண்டு ஏதேனும் ஒரு பிரச்சினை என்றால் நீதிமன்றத்தையே நாடுகின்றனர். எனவே கட்சி பேதமின்றி நீதிமன்ற சுயாதீனத்தை பலப்படுத்த வேண்டும்.

இந்த விடயத்தில் எமது இறையாண்மையை கேள்விக்கு உட்படுத்தும் விதமாக சர்வதேச தரப்பு கூறும் விதத்துக்கு இலங்கையின் நீதிமன்றத்தை இயக்க நாம் தயாராக இல்லை. கடந்த 42 ஆண்டுகளாக காணப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள பல விடயங்களில் இப்போது திருத்தங்களை முன்னெடுத்துள்ளோம். இன்று இதனை விமர்சிக்கும் நபர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏன் எந்தவித மாற்றங்களையும் செய்யவில்லை என்ற கேள்வியை எழுப்புகின்றோம்.

எனினும் இப்போது நாம் மாற்றங்களை செய்துள்ளோம். இதில் ஆலோசனைக்குழுவொன்றை நியமித்து பாதிக்கப்பட்ட தரப்பின் வாக்குமூலங்களைப் பெற்று வருகின்றோம். இப்போது எமக்கு பல மாற்றங்களைச் செய்ய வாய்ப்பு கிடைத்துள்ளது. அதன் மூலமாக பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது. சர்வதேசத் தரப்பினருக்கு தேவையான விடயமெனக் கருதி இதனை முன்னெடுக்கவில்லை. சட்டத்தைப் பலப்படுத்தவும், தனிநபர் சுதந்திரத்தை பலப்படுத்தவும், தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எம்மால் செய்ய முடிந்த சகலதையும் நாம் செய்து முடிப்போம்.

எந்தவொரு நபரும் குற்றமிழைக்காது தண்டிக்கப்படக்கூடாது. ஆகவே தேசிய பாதுகாப்பை பலப்படுத்தி அதே போல் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்- என்றார். (ஒ-இ)

# கடற்படைக்கு வெள்ளையடிப்பு செய்கிறார் அமைச்சர் டக்ளஸ்

### கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

**கொழும்பு, பெப். 12**



**வட பகுதியில் இருக்கும் எங்களின் மீனவர்களை கடற்றொழிலில் இருந்து வெளியேறச் செய்து அந்தக் கரையோரப் பிரதேசத்தை சிங்கள, பௌத்த பிரதேசங்களாக மாற்ற அரசு திட்டமிட்டு செயற்படுகின்றது. இதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் துணைபோகின்றார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த சில வாரங்களாக வடபகுதி கடலில் எல்லை தாண்டி வந்த படகுகளாலும் மற்றும் தென்பகுதியில் இருந்து வருகின்றவர்களாலும் எங்களின் மீனவர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் காரணமாக மீனவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எல்லைதாண்டி வந்த ட்ரோலர் படகு மோதியதில் காணாமல் போன இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினர் பார்த்துக்கொண்டிருக்கதக்கதாகவே இவை நடந்துள்ளன.

வட பகுதியில் இருக்கும் எங்களின் மீனவர்களை கடற்றொழிலில் இருந்து வெளியேறச் செய்து கரையோரத்தை சிங்கள பௌத்த பிரதேசங்களாக மாற்ற இலங்கை அரசு திட்டமிட்டு செய்யும் நடவடிக்கையே இது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உறுதுணையாக இருந்து இந்த அழிவுகளுக்கு துணைபோகின்றார்.

கடந்த 31ஆம் திகதி இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மீனவர்கள் கடலுக்குச் செல்வதை நிறுத்தி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்த மீனவர்கள் தொழிலுக்கு செல்லாதுவிட்டபோதும் அவர்களின் குடும்பங்கள் பசியில் வாடிய போது கடற்றொழில் அமைச்சர் அவர்களைத் திரும்பியும் பார்க்கவில்லை. வாக்குகளுக்காக வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி செயற்பட்டுவரும் இந்த அரசுக்கும் கடற்படைக்கும் வெள்ளையடிக்கும் செயற்பாடுகளையே அவர் செய்கின்றார்.

மீனவர்கள் தமது போராட்டத்தை உயர்தரப் பரீட்சை காரணமாக தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர். தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ந்தும் போராடுவதற்கு அவர்கள் திட்ட மிட்டுள்ளனர். இதற்கு நாங்கள் எங்களின் ஒத்துழைப்புகளை வழங்குவோம்.

இதேவேளை இந்தப்பிரச்சினை தொடர்பில் இந்தச்சபையில் ஒத்திவைப்பு வேளை பிரேரணையொன்றை கொண்டு வருவதற்கு நாங்கள் தீர்மானித்திருந்தோம். இந்த நிலையில் எங்களுடன் தொடர்பு கொண்ட இந்திய தூதரக அதிகாரிகள், தங்களின் பக்கத்தில் இருந்து வரும் மீனவர்களை கட்டுப்படுத்த தீர்மானித்துள்ளோம் என்றும், இதனால் இதற்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொண்டதற்கமைய அந்த ஒத்திவைப்புவேளை பிரேரணையை நிறுத்தியுள்ளோம். இவ்வாறாக வெளிநாட்டு அரசு தங்களின் பக்கத்தில் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள போதும், இன்று வரையில் இந்த அரசில் முது கெலும்பில்லாத அமைச்சர் மட்டுமே அதைப் பற்றி கூறிக்கொண்டிருக்கின்றார். ஆனால் ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர் ஆகியோர் எமது மீனவர்கள் பற்றி கதைப்பதில்லை.

இதேவேளை மயிலிட்டி துறைமுகம் 250 மில்லியன் ரூபா செலவிட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னர் தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்டு சிங்களவர்களிடம் கொடுக்கப்படவுள்ளது. இதனை பார்க்கும் போது அரசு வட பகுதியிலுள்ள மீனவர்களை தொழிலில் இருந்து அப்புறப்படுத்தி அவர்களை வெளியேற்றி இந்தப் பகுதியை சிங்கள மயமாக்கும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தான் இந்த வேலைத்திட்டம் நடைபெறுகின்றது. இதனால்தான் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த தீர்மானமும் எங்களை பாதுகாக்காது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றோம். ஆகவே மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கக் கூடிய அதிகாரத்தை வழங்கக் கூடிய சமஷ்டி தீர்வை வலியுறுத்தி குரல்கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். இதனை சிங்கள தேசம், மூத்த அரசியல் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்-என்றார். (ஒ-22)

# நாட்டை ஆட்சி செய்த சகல தரப்புக்களும் நீதித்துறை சுயாதீனத்தில் தலையிட்டுள்ளன!

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 12

நாட்டின் நீதிமன்ற சுயாதீனத்தில் தலையிடுவதாக இரண்டு அரசியல் தரப்பினரும் ஒருவருக்கு ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டுள்ளனர். நாங்கள் நீதிமன்ற சுயாதீனத்தில் தலையிடவில்லை, நீங்களே தலையிடுகின்றீர்கள் என மாறி மாறி குற்றம் சுமத்திக்கொள்கின்றார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் இரண்டு தரப்பினரும் இந்தத் தவறை செய்துள்ளீர்கள். இரண்டு தரப்பினரும் சுயாதீன நீதித்துறையில் தலையிட்டுள்ளீர்கள் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை, இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டவரைவு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த திருத்தச் சட்டத்தில் புதிதாக எதுவுமே மறுசீரமைக்கப்படவில்லை. இங்கு திருத்தங்கள் எனக் கூறப்பட்டுள்ள சகல விடயங்களும் ஏற்கனவே அவ்வாறே உள்ளன. 18 மாதங்களாக தடுத்து வைக்கப்பட முடியுமென்பதனை 12 மாதங்களாக குறைக்க நடவடிக்கை எடுத்ததாக கூறுகின்றனர். எமக்கு தெரிய 18 ஆண்டுகளுக்கு மேலாக சிலர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இன்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சிலரை பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளீர்கள். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. கவிஞர் அஹ்னாபும் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால் இந்த விடுதலைகளும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஏனைய அமைப்புகள் மூலமாக பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு இவர்களின் பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டதன் காரணமாகவே இடம்பெற்றுள்ளன.

ஆனால் மேலும் பலர் இவ்வாறு உள்ளனர். இருபது, இருபத்தைந்து, முப்பது ஆண்டுகளாக உள்ளனர். குறைந்த பட்சம் 300 - 400 பேர் இன்றைய சூழ்நிலையிலும் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் குறித்து எவரும் பேசுவதில்லை. ஒரு சிலரது வழக்குகளே எப்போதும் பிரபல்யமாக பேசப்பட்டுள்ளன. எனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க அல்லது முழுமையாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

மேலும் தற்போது நீதி அமைச்சர் சில சட்டங்களை திருத்த நடவடிக்கை எடுத்துள்ளார். அதனை வரவேற்கிறோம். அதே போல் சட்ட தாமதங்கள் ஏற்படுவதில் சட்டத்தரணிகள் பக்கமும் குறைகள் உள்ளன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் மட்டுமல்ல இந்த பொறிமுறையிலும் தவறு உள்ளது. அதனை மாற்றியமைக்க வேண்டும்.

நாட்டின் சட்டத்துறை,நீதி சுயாதீனமே ஜனநாயகத்தின் அத்திபாரம். இங்கேதான் சாதாரண மக்கள் தமக்கான நியாயத்தை பெற்றுக்கொள்ள முடியும். இலங்கையின் நீதித்துறை வீழ்ச்சி கண்டுள்ளது. நாம் இதனை சரிசெய்யாது போனால் நாட்டு மக்களே செய்வார்கள். இதுவே புரட்சிகளின் வரலாறு,- என்றார். (அ-ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் மகத்தானவர் மங்கள !

*நாடாளுமன்றத்தில் பிரதமர் புகழாரம்*

கொழும்பு, பெப். 12

மங்கள ஒரு கடுமையான விமர்சகர். மிகக் கூர்மையாக எதிராளியை தர்மசங்கடத்தில் ஆழ்த்தக்கூடிய பரப்புரையாளர். இலங்கை அரசியலில் தவிர்க்கப்பட முடியாதவர் என்று புகழாரம் சூட்டினார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய இரங்கல் உரையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மங்கள சமரவீர 1989ஆம் ஆண்டில் முதன்முதலாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். அன்று முதல் 31 ஆண்டுகளாக அரசியலில் தீவிரமாக இருந்தார். தன் வாழ்நாளின் இறுதிவரை தனக்கே உரிய அரசியல் கொள்கையிலும் தொலைநோக்கு பார்வையிலும் நின்ற ஓர் அரசியல் பிரமுகர்.

1994ஆம் ஆண்டு முதல் அமைச்சரவை அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டதில் இருந்து, பல்வேறு அரசாங்கங்களில் பல பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்துள்ளார். தபால் மற்றும் தொலைத்தொடர்பு, நகர அபிவிருத்தி, துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து, வெகுசன ஊடகம், வெளிவிவகார மற்றும் நிதி அமைச்சர் என்ற பதவிகளை வகித்து தனக்கு வழங்கப்பட்ட பதவிகளை புதிய திசையில் கொண்டு செல்ல மங்கள சமரவீர எப்போதும் முயற்சித்தார்.

அவர் நல்லிணக்கத்தில் நம்பிக்கை கொண்ட அரசியலில் படைப்பாற்றல் மிக்க ஒருவராவார். மங்கள சமரவீர சவால்களுக்கு மத்தியிலும் தனது கருத்துக்களில் இருந்து விலகாது எப்போதும் அந்தக் கருத்துகளுக்காகவே நின்றவர். பின்னர் அவர் சித்தாந்த ரீதியாக வேறுபட்ட அரசியல் முகாம்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும், மங்கள இறக்கும்வரை எனது தனிப்பட்ட நண்பராகவே இருந்தார். அவர் தனது அரசியல் வாழ்க்கையை தனது தனிப்பட்ட வாழ்க்கையுடன் பிணைத்துக் கொள்ளவில்லை. மங்கள ஒரு கடுமையான விமர்சகர். மிகக் கூர்மையாக எதிராளியை தர்மசங்கடத்தில் ஆழ்த்தக்கூடிய பரப்புரையாளர்.

அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக கூறியவுடன், நான் மங்களவை அழைத்து 'மங்கள, நீங்கள் அரசியலில் இருக்க வேண்டும்' என்றேன். அதற்குக் காரணம், இந்த அரசியல் உலகுக்கு மங்கள போன்ற ஒரு போட்டியாளர் அவசியம். அரசியலை தனது தனிப்பட்ட வாழ்வில் கொண்டுபோய் பழிவாங்கல்களை மேற்கொள்ளவோ வெறுப்பை ஏற்படுத்தவோ தயாராக இல்லாதவர் என்றார். (அ- ம)


## முக்கிய அறிவித்தல்

### அடகுநகை விற்பனை அறிவித்தல்
### ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி

20.06.2020 ஆம் திகதி தொடக்கம் 10.01.2021 வரை அடகுவைத்த நகைகளை 15.03.2022 க்கிடை யில் மீட்டுக்கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும். தவறின் 15.03.2022 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்டுவிடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(cs.42868) (2.6)

**இல.31C ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி**
(சந்தைக்கு அருகில்)

**021 221 7287, 076 636 1238**



## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 23 . 02 . 1974
விண்ணுலகில் 30 . 01 . 2015
திதி:ஏகாதசி

**அமரர் பாலசுப்பிரமணியம் தர்மசீலன்**
(B.Sc, Dip. in Education)
(பௌதீகவியல் ஆசான் யா/அருணோதயாக் கல்லூரி)

எங்கள் உயிரே
எமைப் பரிதவிக்கவிட்டுச் சென்று
ஏழாண்டுகள் என்ன ஏழேழு ஜென்மங்கள்
ஏகிடினும் ஆறிடுமோ! எம் துயரம்.

குடும்பத்தினர்.



## 11ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு 01 . 04 . 1951
இறப்பு 15 . 01 . 2011

**அமரர் நடராசா இரங்கநாதன்**
திதி: தை மாத பூர்வபக்க ஏகாதசி

குடும்ப குலவிளக்காய்
விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டுகள் பத்து சென்றாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
என்றென்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

(cs.118689) (2.6)

29/21, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி,
இ.சாரதாதேவி



## மக்கள் வங்கி / PEOPLE'S BANK

### கேள்விப்பத்திர அறிவித்தல்
### மக்கள் வங்கி
### சுத்திகரிப்புச் சேவைகளுக்கான
### கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ் பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்.ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக் கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், காங்கேசன்துறை,உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும், யாழ். பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 1000/-ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2022 பங்குனி 08ஆம் திகதி செவ்வாய்கிழமை பி.ப 3.00 மணிவரை எந்தவொரு வார நாளிலும் மு.ப 9.00 – பி.ப 4.00 மணிவரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப் படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப்பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2022 பங்குனி 09 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2.00மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக் கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல: 82, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Fax : 021-2222602
E-mail : jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல : 021-2222601 / 0212228602

(cr.37542) (2.7)



## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 08 . 1931
மறைவு 07 . 02 . 2022

**அமரர் செல்லத்துரை இராசலட்சுமி**
(தெய்வானைப்பிள்ளை)

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும், நோர்வே Oslo வை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசலட்சுமி (தெய்வானைப்பிள்ளை) கடந்த (07.02.2022) திங்கட்கிழமை நோர்வேயில் இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (17.02.2022) வியாழக்கிழமை நோர்வே நேரப்படி காலை 8.00 மணியளவில் Stahlsberg Hagen Cemetery and Crematorium Cvre Roelingsveg 1,2005 Roelingen, Norway) இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
செல்வேந்திரன்
(மகன் - Norway) 004 792 043050

தகவல்:
குடும்பத்தினர்



## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி - 11.03.1972

### பதவி வெற்றிடம் (எழுதுநர் - 302/14)
### 01.02.2022ம் திகதிய பத்திரிகையின்

மேற்படி பதவிக்கான விளம்பரத்துடன் இதனையும் சேர்த்து வாசிக்கவும்

**தகைமைகள்:**

அ. கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர் /கணினிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 16வது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணினிப் பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளிற்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி.கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

குறிப்பு :

01. ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீள விண்ணப்பம் அனுப்பி வைக்க வேண்டியதில்லை.
02. விண்ணப்ப முடிவு திகதி 25.02.2022 வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்
[illegible] வீதி, சாவகச்சேரி.
11.02.2022

(cr.37552) (2.6)

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்,
திரு.வ.தெய்வேந்திரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 21 . 01 . 1957

இறப்பு 13 . 01 . 2022

அமரர்

## செல்வராணி பாலசுப்பிரமணியம்

எனது அன்பு மனைவியும், எங்கள் அம்மாவும் நோயுற்றிருந்த வேளையில் அவருக்கு ஆதரவாக இருந்த அனைவருக்கும், வைத்தியசாலையில் வந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது முதற்கண் நன்றிகள். மனைவியின் மறைவைக் கேள்வியுற்று நேரிலும் தொலைபேசி ஊடாகவும், சமூக வலைத் தளங்கள் ஊடாகவும் எம் சோகத்தில் பங்கேற்றவர்களுக்கு எம் நன்றிகள். அம்மாவின் இறுதிச் சடங்கில் நேரடியாகவும் வலைத்தளம் ஊடாகவும் பங்கேற்றவர்களுக்கும், எம் அம்மாவின் பூதவுடலை பார்வையிட உடனோடி வந்தவர்களுக்கும், மலர்வளையங்கள், பூமாலைகள் அனுப்பிய அன்புள்ளங்களுக்கும், பதாகைகள் கட்டியவர்களுக்கும், பத்திரிகைகளிலும் சமூக வலைத்தளங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் இறுதிச் செய்தியைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். எமக்கு உணவளித்த அன்புள்ளங்களுக்கும் நன்றிகள்.

31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று 12.02.2022 சனிக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

94/5, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
076 003 4783

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 01 . 1934

மறைவு 10 . 02 . 2022

## திரு. சின்னப்பா கனகரத்தினம்

[ஓய்வுபெற்ற வருமானவரி மதிப்பீட்டாளர்
(Retired Assessor Incometax Department)
முகாமையாளர் - சுகர்னி மருத்துவ நிலையம்]

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா கனகரத்தினம் நேற்றுமுன்தினம் (10.02.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், கல்யாணி (London), கனகராசா (London), காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயநேசன் (London), குந்தவி (London), Dr. சிவன்சுதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், Dr.தாரிக்கா, விதுஷன், சிவேந்தன், சிந்தூரி, காவியா, திவ்யன் ஆகியோரின் அன்புப் பேரனும், வேலும்மயிலும், நவரத்தினசாமி, செல்வவிநாயகம், லோகநாயகி பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை சோளியவத்தை துன்னாலையில் அவரது இல்லத்தில் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்னாலை கியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21, கேணியடி வீதி,
திருநெல்வேலி.

(cs.18619) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

## பணிப்பெண் தேவை

யாழ்நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலைசெய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

(cs 18603) (2.6) 077 165 8524

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வயது முதிர்ந்த தாயைப் பராமரிக்க வீட்டுப் பணிப்பெண் தேவை.

077 069 8105

## சிறகுகள் மதியுரை கருத்தமர்வு

இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் கற்கை நெறிகள் தொடர்பிலான கருத்தமர்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இணையவழியில் இடம்பெறும்.
876 6980 5744 என்ற கடவுச் சொல்லின் மூலமாக கருத்தமர்வில் இணைந்துகொள்ள முடியும். (ம)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 06 . 1956

மறைவு 23 . 01 . 2021

## திருமதி ரஞ்சனாதேவி பாலேந்திரன்

(ஓய்வுபெற்ற முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி)

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

இணுவில் கிழக்கு, இணுவில்.

மகன், மகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 30 . 04 . 1962

மறைவு 13 . 01 . 2022

அரியாலையைப் பிறப்பிடமாகவும், அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட
எமது குடும்பத் தலைவர்

## அமரர் மாசிலாமணி சிறீதரன் (தேவன்)

(யா/ மாநகர சபை ஊழியர்)

கடந்த (13.01.2022) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்த் தலைவரின் பிரிவுச் செய்தியறிந்து எங்கள் துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், மாநகரசபை ஊழியர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோர், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆறுதல் கூறியோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன்.

இன்று (12.02.2022) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அல்வாய் தெற்கு.

(cs.42873).92.6)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே.தீவுகளுக்கு எதிரான தொடரை வழித்துத்துடைத்தது இந்திய அணி



சிட்னி, பெப். 12

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில், நேற்று நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்திலும் வெற்றிபெற்று 3:0 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது இந்திய அணி.

முதலிரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று கிண்ணம் வெல்வதை உறுதிசெய்த காரணத்தால் இந்திய அணியில் நான்கு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. தவான், ஸ்ரேயாஸ், குல்தீப், சகர் ஆகியோர் அணிக்குள் உள்வாங்கப்பட்டு, ராகுல், தாகூர், சாகல், கூடா ஆகியோருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. கோலி ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். அதிகபட்சமாக ஸ்ரேயாஸ் 80 ஓட்டங்களையும், பன்ட் 56 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கோல்டர் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 169 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. 96 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றிபெற்றது. சிராஜ், பிரசித் கிருஷ்ணா இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஸ்ரேயாஸும் தொடராட்ட நாயகனாக பிரசித் கிருஷ்ணாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ம)

## மரண அறிவித்தல்

மலர்வு 05 . 05 . 1943



உதிர்வு 11 . 02 . 2022

### திரு.தாமோதரம்பிள்ளை தம்பித்துரை

காளி கோவிலடி பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.தம்பித்துரை அவர்கள் 11.02.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரதீபன், பிரசாத், நிருபா, வினோஜிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரசாந்த், கோகுலன், லக்சன் ஆகியோரின் மாமனாரும் திஸா, ஆதிஷ்,பவிஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தீர்த்தாங்குள இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0770366445, 0750422250
காளி கோவிலடி, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 37555)1-6

## மரண அறிவித்தல்



### திரு. செல்லத்துரை நித்தியானந்தம்

**கல்வளைப் பிள்ளையார் கோவில், பத்திரகாளி அம்மன் கோவில்**
**சண்டிலிப்பாய் ஆகியவற்றின் முன்னாள் தலைவர்**

பெரியவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் யாழப்பாணம் அத்தியடி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நித்தியானந்தம் அவர்கள் நேற்று (11.02.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை தங்கம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் நந்தினி, காலஞ்சென்ற பரராஜசிங்கம், மாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், இராசசிங்கம் மற்றும் கலாநிதி எதிர்வீரசிங்கம் (அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (செல்லக்கண்டு), பரராசசிங்கம், செகராசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுசீந்திரன், நந்தினி (சுவிற்சலாந்து), சிவஜீவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிவரதிகன், நிருத்திக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரின் சண்டிலிப்பாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

"அன்னைவாசா"
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS …)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 02 . 1930



மறைவு 11 . 02 . 2022

### பேற்றம் நவரட்ணசிங்கம் இராசநாயகம்

புத்தளத்தை பிறப்பிடமாகவும், கனடாவையும், கொக்குவிலையும் வசிப்பிடமாகவும் கொண்ட பேற்றம் நவரட்ணசிங்கம் இராசநாயகம் அவர்கள் நேற்று (11.02.2022) வெள்ளிக்கிழமை கொக்குவிலில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எட்வேட் இராசநாயகம் அலிஸ் நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை மரகதவள்ளி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் பாசமிகு கணவரும், சசிக்கலா (கனடா), நிரஞ்சலா, சிரோமினி, சுஜீத்தா (டென்மார்க்) செந்தீசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணராஜா (கனடா), பத்மநாதன், காலஞ்சென்ற நந்தகுமார், மோகனகுமார் (டென்மார்க்), ரோஸ் (கனடா) ஆகியோரின் மாமனாரும், மிருனன் ஜீவிதா (கனடா) கீர்த்திகா லதீபன் (கனடா) ஜீவிதன் (கனடா) ருக்ஷாஜினி சுதர்சன், ரூபலவன் காயத்திரி (USA) கிந்துஷன், வேதாசினி அபிலாஷ், வர்ணவி டயநாத் நிலூசன் ஜெனிபர் (டென்மார்க்) நிலுசினி, வாகினி (டென்மார்) யோஸ்வா, சேனாயா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், கதிர் (கனடா), சைனிக்கா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும், காலஞ்சென்றவர்களான S.T. இராசநாயகம், J.J. இராசநாயகம், W.R. இராசநாயகம், மகேஸ்வரி, நேசமலர் மற்றும் விஜயலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.02.2022) அவரது இல்லத்தில் நடைபெற்று, சென்.ஜோன்ஸ் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 18635) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டுக்கு சாபக்கேடு

## ரிஷாத் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, பெப்.12**

**பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டுக்கு சாபக்கேடு. இதன் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் பல வருடங்களாக சிறையில் வாடுவதை நான் சிறையில் இருந்தபோது கண்டேன் என நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்டவரைவு, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸால் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் போது உரையாற்றிய போதே ரிஷாத் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான திருத்தத் தில் எந்தவொரு பெரிய மாற் றத்தையும் நான் காணவில்லை. இதன் கீழ், சந்தேகநபர் ஒருவரை மூன்று மாத காலத்துக்கு ஒரு தடவை என்ற அடிப்படையில், 18 மாத காலம் தடுத்துவைக்க பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் 12 மாதங்களாகக் குறைக்கப்பட்டமை மாத்திரமே இதிலுள்ள மாற்றம். சுமார் 18 அல்லது 20 வருடங்களாக தமிழ் இளைஞர்கள் பலர் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் அல்லது வழக்கு முடியாமல் சிறையில் வாடுகின்றனர். நான் சிறையில் இருந்தபோது இதனைக் கண்ணால் கண்டேன். மன்னிப்பு வழங்கப்பட்ட போராளிகள் பலர் சமூக வலைத்தளங்களில் சில விடயங்களைப் பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மீண்டும் சிறைவைக்கப் பட்டுள்ளனர். அவ்வா றனவர்களுக்கு இந்த திருத்தச் சட்டத்தில் எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை. ஈஸ்டர் குண்டுத் தாக்குதலைக் காரணமாக வைத்து என்னையும் எந்தவிதமான காரணமும் இன்றி பல மாதகாலம் சிறையில் அடைத்தனர். எனவே, இந்தச் சட்டத்துக்கு எல்லோருமே பலியாகி வருகின்றனர். பாதுகாப்பு அமைச்சர் நினைத்தால் கையொப்பமிட்டு, சந்தேகம் என்று சிறையில் வைக்க முடியும் என்ற இந்தச் சட்டம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடு - என்றார். (வ-22)

---

### காதலுக்கு...

அறிமுகப்படுத்த சுற்றுச்சூழல் அமைச்சு முடிவு செய்துள்ளது.

சுற்றாடல் அமைச்சு, பாதுக்க பசுமைப் பல்கலைக்கழகம், இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழக வளாகம் மற்றும் இலங்கை அபிவிருத்தி அறக்கட்டளை ஆகியன இணைந்து இந்த மரநடுகை திட்டத்தை நடத்தவுள்ளன. (அ-ம)

### பூசாரியை...

பெற்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பகுதியில் இருந்து கெருடாவில் பகுதிக்கு பூஜை செய்ய வந்த பூசாரியிடமே இவ்வாறு கப்பம் பெறப்பட்டுள்ளது என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அன்றையதினம் அடையாள அணிவகுப்பை முன்னெடுக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-23)

### சடலம்...

பொலிஸார் தெரிவித்தனர்.

செம்மணி வீதி நல்லூர் பகுதியினை சேர்ந்த நாகரத்தினம் இந்துஜன் (வயது-27) என்ற இளைஞனின் சடலமே இவ்வாறு மீட்கப்பட் டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-23)

### 4 பொருள்களுக்கே...

நுகர்வோருக்குத் தடையின்றி பொருள்களை வழங்குவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவுக்கும், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பால்மா, எரிவாயு, கோதுமை மா, சிமெந்து ஆகிய பொருள்களுக்கு மட்டுமே நாட்டில் சிறிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இல்லை - என்று நிதி அமைச்சர் பஸில் மேலும் தெரிவித்தார். (அ-ம)

### கூட்டு...

அந்த யுவதிக்கும் அழைப்பை ஏற்படுத்தியவருக்கும் இடையில் காதல் ஏற்பட்டுள்ளது. துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த குறித்த பிரதான சந்தேக நபர் யுவதியை நேரில் சந்திக்க வருமாறு அழைத்துள்ளார். இதையடுத்து யுவதியும் வீட்டிலிருந்த நகைகள் மற்றும் 40 ஆயிரம் ரூபா பணத்துடன் அவரைச் சந்திக்கச் சென்றுள்ளார். அங்கு யுவதியுடன் உல்லாசமாக இருந்த குறித்த இளைஞர், அவர் கொண்டுவந்த நகைகளையும் அபகரித்துச் சென்றுள்ளார். இதன் பின்னர் குறித்த இளைஞரின் நண்பர்கள் என்று கூறி, அங்குவந்த மூன்று இளைஞர்கள் யுவதியை வன்புணர்ந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அவர் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அன்றைய தினம் அடையாள அணிவகுப்பை மேற்கொள்ளவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-23)

### கார் - ...

காயமடைந்தனர்.

இந்த விபத்துத் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கார் கனகராயன்குளம் பகுதியில் வீதியில் மறுபக்கம் செல்ல முற்பட்டுள்ளது. இதன்போது அதே பாதையில் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், அந்தக் காருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. பஸ் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து பாதையை விட்டு கீழிறங்கி அருகேயிருந்த காணியினுள் புகுந்தது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-18)

### இலங்கை...

தது. இந்த ஆட்டம் சிட்னி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றது. இந்த மைதானத்துக்கு முன்பாகவே புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (அ-ம)

### இராவணனை...

நாடாளுமன்றத்தில் அவர் முன்வைத்த பிரேரணையில் மேலும் உள்ளதாவது:

இலங்கை மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லை. முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறான ஆய்வுகளால் இலங்கை வரலாற்றில் மறைந்து போயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டுவரவும் முடியும். புத்திஜீவிகள் குழுவால் இந்த ஆய்வு முறைசார் ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றுள்ளது. (அ-ம)

### கொலைக்குற்றவாளியே...

வவுனியா பல்கலைக் கழகத்தின் திறப்பு விழா நிகழ்வு பம்பைமடு பகுதியில் அமைந்துள்ள பல்கலைகழக வளாகத்தில் ஜனாதிபதியின் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதற்காக ஜனாதிபதி வருகை தந்த போதே அவருடைய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'எமது உறவுகள் காணாமல் போகவில்லை. காணாமல் ஆக்கப்பட்டார்கள்', 'நாங்கள் இந்த நாட்டின் குடிமக்கள் இல்லையா?', 'கொலைக்குற்றவாளியே, நம் நாட்டின் ஜனாதிபதி' போன்ற கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினார்கள்.

இதனையடுத்து, ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் குறித்த போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி, இருவரை மாத்திரம் ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சுநடத்த வருமாறு அழைத்தனர். அதற்கு மறுப்புத் தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். சுமார் இரண்டு மணிநேரம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-110)

### பறிபோன...

துடன், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு ஓர் ஆசனம் அதிகரித்துள்ளது.

இறுதியாக 2020ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது 2019ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியல் பயன்படுத்தப்பட்டது. அதன்போது 5. லட்சத்து 71 ஆயிரத்து 842 பேராக யாழ்.தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கை காணப்பட்டது. அதற்கு அமைவாக 7 ஆசனங்கள் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு இருந்தது.

2020ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வின்போது முதல் தடவையாக வலி. வடக்கில் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதனால் 42 ஆயிரத்து 234 பேர் வாக்காளர் பெயர்ப்பட்டியலிருந்து நீக்கப்பட்டனர். இதற்கு அமைவாக 2020 ஆம் ஆண்டு வாக்காளர் எண்ணிக்கை 5 லட்சத்து 63 ஆயிரத்து 197 ஆகக் குறைவடைந்தது.

இதனால் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கை 7 இலிருந்து 6 ஆகக் குறைந்ததுடன் கம்பஹா மாவட்டத்தின் நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கை 18 இலிருந்து 19ஆக அதிகரித்தது.

2021ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வின்போது யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை 5 லட்சத்து 72 ஆயிரத்து 446ஆக அதிகரித்தது. இந்த நிலையில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கை ஒன்றால் அதிகரித்து மீண்டும் 7 ஆகியுள்ளது. கம்பஹா மாவட்டத்தின் ஆசன எண்ணிக்கை மீண்டும் 18 ஆக குறைந்துள்ளது.

இதேவேளை 2022ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் மீளாய்வு ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

### வவு...

தனியான பல்கலைக் கழகமாக கடந்த வருடம் அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து பல்கலைக் கழகத்துக்கான ஆரம்ப நிகழ்வு பம்பைமடுவில் உள்ள பல்கலைக் கழக வளாகத்தில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது.

கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கு.திலீபன், துணைவேந்தர் ரி.மங்கலேஸ்வரன், அமைச்சின் செயலாளர்கள், மதகுருமார்கள், திணைக்களத் தலைவர்கள் உட்பட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-110)

**(செய்தியோடு தொடர்புடைய மேலும் சில படங்கள் பக்கம் - 2)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்கள் மூலமாக விவசாயம் மேம்படல் வேண்டும்!

## ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு

**வவுனியா, பெப். 12**

**எமது நாடு ஒரு விவசாய நாடு என்பதால் எதிர்காலத்தில் விவசாயத் துறையில் பாடத்திட்டங்களை உருவாக்கி அவற்றில் பட்டங்களை பெற்றுக் கொடுத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கப் பல்கலைக்கழகங்கள் முன்வர வேண்டுமென்று தெரிவித்தார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.**

வவுனியா பல்கலைக்கழகத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய பல்கலைக்கழகத்தை உருவாக்கி இந்த பிரதேச மாணவர்களிடம் கையளிப்பதில் பெருமையடைகின்றேன்.

பல்கலைக்கழகங்கள் ஊடாக தொழில்நுட்ப சவால்களை முறியடித்து நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். எதிர்வரும் காலங்களில் எமது நாட்டில் தொழில்வாய்ப்புகளை உருவாக்க கூடிய கல்விமுறைகளை நாம் உருவாக்க அயராது உழைக்க வேண்டும்.

எமது நாடு ஒரு விவசாய நாடு என்பதால், எதிர்காலத்தில் விவசாயத் துறையில் பாடத்திட்டங்களை உருவாக்கி அவற்றில் பட்டங்களை பெற்றுக் கொடுத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க பல்கலைக் கழகங்கள் முன்வர வேண்டும். எதிர்காலத்தில் மிக அதிகளவான மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு உள்ளீர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார்.

(அ-ம-110)


## வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் இயங்குகின்ற தொழிற்பேட்டை நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- இயந்திர இயக்குனர் (Exquder Machine Operator
- உதவியாளர் Assisstant

வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு.

(CR 37485) (3/6) **077 310 7823**

## வேலையாட்கள் தேவை

நன்கு அனுபவமுள்ள **Designer (Photoshop) Typiste (Coreldraw)** எதிர்வரும் (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை நேரில் வரவும்.

**பிரகவி பிரிண்டேர்ஸ்**
**மஞ்சத்தடி வீதி, இணுவில் கிழக்கு,**

தொடர்புகளுக்கு: **070 658 7186**

## விற்பனைக்கு

**ஜேர்மன் சப்போட் நாய்குட்டிகள்**
விற்பனைக்குண்டு தடுப்பூசி போடப்பட்டது.

(cs 12625) (2.6) **077 947 5996**

## English Classes

Gr-1 to O/L
வீடு வந்து கற்பிக்கப்படும்.
Grammar and Syllabus

**T.P: 077 3314 608**

## Chemistry இரசாயனவியல்

பிரபல பாடசாலையின் விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியரினால் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் தனி அல்லது குழு வகுப்புக்களாக கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு:

**076 021 8959**

## பெண் உதவியாளர் தேவை
(சிட்டை எழுதுனர்)

யாழ். ஆஸ்பத்திரி வீதி, முன்பாக இயங்கும் ஸ்தாபனத்துக்கு பெண் (Bill Clerk) சிட்டை எழுதுனர் தேவை. (தகைமை: O/L)

(cs42859) (2.6) **074 228 1682**

## வீடு வாடகைக்கு

கச்சேரியில் யாழ். செயலகத்திற்கு
ஒரு நிமிட நடை தூரத்தில்
வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
மூன்று அறைகள்.
இரண்டு வரவேற்பறை, சமையலறை,
Toilet. அரச அல்லது தனியார்
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(cs 42866) (2.6) தொடர்பு: **077 142 2846**

## வேலையாட்கள் தேவை

பிரபல கட்டட பொருள் விற்பனை நிலையத்திற்கு பொருட்கள் ஏற்றி இறக்குவதற்கு வேலையாட்கள் தேவை.

**சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்**
**55-57, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 18628) 1-6 **076 7628 282**

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கு, பலாலி வீதி, வீரகத்திப் பிள்ளையார் கோவிலிலிருந்து 50 m தூரத்தில் அமைந்திருக்கும் 8 பரப்புக் காணி 2 பரப்பாக பிரித்து விற்கப்படும்.

(cs 42755) (2.6) **076 940 1045**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் காணி விற்பனைக்கு. 16 பரப்பு பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. 2 பரப்பாக பரப்பு எட்டு இலட்சம். புன்னாலைகட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம் வாகையடி சந்தி.

**074 269 0854**

## காணி விற்பனைக்கு

யாழ். சுன்னாகம் - புன்னாலைக்கட்டுவன் பிரதான வீதியிலிருந்து 2ஆம் காணி 5 1/2 பரப்புக் காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 700M தூரம்.

தொடர்புகளுக்கு:
**077 911 6983**
**077 288 0152**

## காணி விற்பனைக்கு

யாழ். சாவகச்சேரி நகரத்தில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A-9 வீதியில் இருந்து 200 M தூரத்தில், பஸ் நிலையத்தி லிருந்து 300 M தூரம், ரெயில்வே ஸ்ரேசனில் இருந்து 150 M தூரத்தில்.

தொடர்புகளுக்கு:
**077 6585 999**
**076 6583 621**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 54 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
14 அடி பாதையுடன் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
நிலப்பரப்பு
**A-32** பிரதான வீதியில் இருந்து **500 m** தூரம்.
பயன்தரும் 250 தென்னைகள் உள்ளன.
நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்)
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை
தரகர் தேவையில்லை.



தொடர்பு:
**077 1178 578**
**077 8147 389**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்
**A-32** பிரதான வீதியில் இருந்து **400 m** தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை.



தொடர்பு:
**077 8147 389**
**077 1178 578**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.